


## சென்னை உயர்நீதி மன்ற பொறுப்பு தலைமை நீதிபதியாக

# நீதிபதி எஸ்.வைத்தியநாதன் நியமனம்!

சென்னை, மே 26 -

சென்னை ஐகோர்ட்டின் புதிய பொறுப்பு தலைமை நீதிபதியாக எஸ்.வைத்தியநாதனை குடியரசுத்தலை வர் திரவுபதி முர்மு நியமித்து உள்ளார். சென்னை, ஐகோர்ட்டின் தலைமை நீதிபதியாக பதவி வகித்து வந்தவர் டி. ராஜா. சென்னை ஐகோர்ட்டின் தலைமை நீதிபதியாக பதவி வகித்து வந்த முனீஷ்வர் நாத் பண்டாரி கடந்த 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 12 ஆம் தேதி பணி ஓய்வுபெற்றார். அவரை தொடர்ந்து செப்டம்பர் மாதம் சென்னை உயர் நீதி மன்ற பொறுப்பு தலைமை நீதிபதி யாக நியமிக்கப்பட்டார் டி ராஜா.

இதற்கிடையே ஒடிசா உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியாக இருந்த முரளிதரை சென்னை ஐகோர்ட்டு தலைமை நீதிபதியாக நியமிக்க உச்சநீதி மன்றம் கொலீஜியம் பரிந்துரைத்தது. ஆனால், தமிழ் நாட்டைச் சேர்ந்த முரளிதரை சென்னை ஐகோர்ட்டு தலைமை நீதிபதியாக நியமிக்க வேண்டும் என்ற கொலீஜியத்தின் பரிந்துரையை ஏற்காமல் ஒன்றிய அரசு காலம் தாழ்த்தியது.

கொலீஜியத்தின் பரிந்துரைபடி முரளிதரை சென்னை உயர்நீதி மன்ற தலைமை நீதிபதியாக நியமிக்காததன் பின்னணியில் பல்வேறு அரசியல் காரணங்கள் இருப்பதாக குற்றச்சாட்டுகள் எழுந்தன. இந்த நிலையில் கொலீஜியமும் கடந்த ஏப்ரல் தனது பரிந்துரையை திரும்ப ப்பெற்றுக் கொண்டது. அவரை தொடர்ந்து மும்பை உயர் நீதிமன்ற பொறுப்பு தலைமை நீதிபதியாக உள்ள கங்கா பூர்வாலாவை சென்னை உயர்நீதி மன்ற தலைமை நீதிபதியாக நியமிக்க சுப்ரீம் கோர்ட்டு கொலீஜியம் பரிந்துரைத்தது. அந்த பரிந்துரை மீது ஒன்றிய அரசு இன்னும் முடிவெடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

நீதிபதி வைத்தியநாதன் மே 25 அம் தேதி முதல் தலைமை நீதிபதிக்கான பணிகளை மேற்கொள்வார் என அறிவிக்கப்பட்டு உள்ளது.






கோவை வடக்கு மாவட்டம்,காரமடை கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் திராவிட மாடல் அரசின் இரண்டாண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் காரமடை கிழக்கு ஒன்றிய செயலாளர் எஸ்.எம்.டி. கல்யாணசுந்தரம் தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் கழக துணைப் பொதுச் செயலாளரும், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினருமான ஆ. ராசா கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். நிகழ்ச்சியில் தலைமை கழக பேச்சாளர் எல். பி. தர்மலிங்கம்,கோவை வடக்கு மாவட்டச் செயலாளர் ரவி, முன்னாள் எம்.எல்.ஏக்கள் சி.ஆர். ராமச்சந்திரன், ப.அருண்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் டி.ஆர். சண்முகசுந்தரம், காரமடை நகரச் செயலாளர் வெங்கடேஷ், மேற்கு ஒன்றிய செயலாளர்சுரேந்திரன், இந்து சமய அறநிலையத்துறை கோவை மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர் கவிதா கல்யாணசுந்தரம். உதயகுமார், எஸ்.பி.சரவணன். எல்.ஐ.சி. செந்தில் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## அண்ணல் அம்பேத்கர் நூல்கள் தமிழில் வெளியிடும்

# திட்டப் பணிக்கு தற்காலிகப் பணியாளர்கள் நியமனம்!

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் அறிவிப்பு!

சென்னை, மே 26 -

அண்ணல் அம்பேத்கர் நூல்கள் தமிழில் செம்பதிப்பாக வெளியிடும் திட்டப் பணிக்கு தற்காலிக பணியாளர்கள் நியமனம் தொடர்பாக உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் அறிவிப்பு ஒன்றை வெளியிடுள்ளது.

அது வருமாறு:-

முதலமைச்சர் அவர்களால் 2022 - 2023ஆம் ஆண்டுக்கான சட்டமன்றப் பேரவை விதி எண்110ன் கீழ் அறிவித்த அறிவிப்பில் "அண்ணல் அம்பேத்கர் அவர்களின் தேர்ந்தெடுக்கப் பட்ட நூல்கள் தமிழில் செம்பதிப்பாக வெளியிடுதல்" என்பதாகும்.

இத்திட்டப்பணியை மேற்கொள்ள திட்ட மேற்பார்வையாளர் திங்கள் தொகுப்பூதியம், ரூ. 40,000/, திட்ட உதவியாளர், திங்கள் தொகுப்பூதியம்

ரூ. 22,000/ மற்றும் அலுவலக உதவியாளர், திங்கள் தொகுப்பூதியம் ரூ. 15,000/ ஆகியப் பணியிடங்களில் தற்காலிகமாகப் பணியாளர்கள் எதிர்வரும்

3 ஆண்டு களுக்கு நியமனம் செய்யப்பட உள்ளனர். இப்பணியிடங்களுக்கு விருப்பமும், தகுதியும் உள்ளவர்கள் விண்ணப்பத்துடன் சான்றிதழ்களின் சுய சான்றொப்பமிட்ட ஒளிப்படிகளுடன் இணைத்து வரும் 30.05.2023 பிற்பகல் 5.30 மணிக்குள் இயக்குநர் (கூ. பொ.), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், இரண்டாம் முதன்மைச் சாலை, மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம், தரமணி, சென்னை 600 113 என்ற முகவரிக்கு நேரிலோ, அஞ்சலிலோ அனுப்பக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும் விண்ணப்பம் மற்றும் தகுதிகள் குறித்த விவரங்களை www.ulakaththamizh.in என்ற வலைத்தளத்தில் பதிவிறக்கம் செய்துக் கொள்ளலாம்.

இவ்வாறு உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குனர் அறிவித்துள்ளார்.

## முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை

# திருப்பூர்தெற்குமாவட்டம்முழுவதும்நலஉதவிகள்வழங்கிகொண்டாடுவோம்!

## மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்!

திருப்பர், மே 26 -

திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம் தாராபுரம் உடுமலை சாலையில் அமைந்துள்ள லைன்ஸ் கிளப் மஹாலில் மாவட்டக் கழக அவைத்தலைவர், மடத்துக்குளம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் இரா. ஜெயராமகிருஷ்ணன் தலைமையில், மாவட்டக் கழக செயலாளர், திருப்பூர் 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

இதில் கழக மகளிர் தொண்டரணிதுணைசெயலாளர்சத்யாபழனிக்குமார், தலைமை கழகத்தால் நியமிக்கப்பட்ட சட்டமன்ற தொகுதிபார்வையாளர்கள் அயலக அணி துணை செயலாளர், சேலம் மாமன்ற உறுப்பினர் உமாராணி (காங்கேயம்), கழக செய்தி தொடர்புக்குழு துணை செயலாளர் சித்திக் (மடத்துக்குளம்),நெசவாளர்அணி செயலாளர் கே.எம்.நாகராஜன் தாராபுரம் (தனி), மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள்ராசிகே.ஆர். முத்துக்குமார்,டி.சக்திவேல், பெ.பிரபாவதி, பொருளாளர் கே.எம்.முபாரக் அலி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள்கே.எஸ்.தனசேகர், சி.சியாம்பிரசாத், வி.மகாலிங்கம், பொதுக்குழு உறுப்பினர்கள் எம்.ஆர்.பாபு, வழக்கறிஞர் ஆ.இராம லிங்கம், யு.என்.பி.குமார், கே.எஸ்.கருணாகரன், ஆர். சிவக்குமார், எ.கே.கார்த்திகேயன், சா.மெய்யப்பன், எம்.பார்வதவர்த்தினி,

ஒன்றிய செயலாளர்கள் எஸ்.வி.செந்தில்குமார், கே.சந்திரசேகரன், சி.செந்தில்குமார், ப.பழனிசாமி, துரை தமிழரசு, எஸ்.சந்திரசேகரன், சா.ராஜ மாணிக்கம்,ச.கிரி,சி.பிரபு,எஸ்.ஆர். எஸ்.செல்வம்(எ)தமிழ்செல்வம், சி.கருணைபிரகாஷ், கே.கே.சிவானந்தன், எம். எஸ்.முரளி, எம்.எ.சாகுல்அமீது, கே.ஈஸ்வரசாமி, தி. செழியன், எஸ்.கே.எம்.தங்கராஜ் (எ) மெய்ஞான மூர்த்தி, க.செந்தில்குமார், எஸ்.என்.காணியப்பன், ஜி.கதிர்வேல்,என்.கமலகண்ணன், ப.பழனி சாமி, துரை தமிழரசு, நகர செயலாளர்கள் நா.சேமலையப்பன், சு.முருகானந்தம், எஸ்.முருகானந்தம், பேரூர் செயலாளர்கள் கு.குப்புசாமி, எஸ். அன்பரசு, கோ.சுரேஷ், க.தண்டபாணி, ரா.பன்னீர் செல்வம், என்.பால கிருஷ்ணன், ஆ.பாலகிருஷ்ணன், எஸ்,எம்.ராமசாமி உள்பட மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள்நிறைவேற்றப் பட்டன.

கலை, இலக்கியம், அரசியல் என முப்பரிமாணம் கொண்டு சிறப்பாக செயல் பட்டவரும்,நம்தாய்மொழியாம் தமிழ்மொழிக்கு செம்மொழி உயர்வை பெற்றுத்தந்தவரும் உலகெங்கும் பரவிக்கிடக் கும் தமிழினத்தின்உள்ளங்களில் எந்நாளும் குடிகொண்டிருப்பவருமான முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு திருப்பூர் தெற்கு மாவட்ட கழகத்திற்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர், வார்டு, கிளை கழகங்களின் சார்பிலும், துணை அமைப்புகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்களும் இணைந்து பொதுமக்கள் பயன்பெறும்வகையில்நலத் திட்டஉதவிகள்வழங்கியும், கழகத்தின் இருவண்ண கொடியை ஏற்றியும், கழகத்தின்மூத்தமுன்னோடிகளை சிறப்பிக்க செய்தும், ஏழை எளிய பொது மக்களுக்கு, முதியோர், ஆதரவற்ற குழந்தைகள், மாற்றுத் திறனாளிகளுக்குஇன்றைய காலகட்டத்திற்கு தேவையான மருத்துவ உதவிகள், அத்தியாவசியபொருட்கள் மற்றும் உணவுகள் வழங்கியும், முத்தமிழறிஞர் கலைஞர்அவர்களின்திருவுருவப் படத்தினை வைத்து மலர் தூவி மரியாதை செலுத்தியும், முத்தமிழறிஞர் கலைஞர்அவர்களின்நூற்றாண்டு விழாவை எழுச்சியோடு நினைவு கூரும் வகையில் சரித்திர நாயகன் இந்தியாவில் வேறு எந்த தலைவருக்கும்இல்லாதசமூகநீதிகாத்த எந்நாளும் நம் இதயத்தில் குடிகொண்டுஇருக்கும்முத்தமிழறிஞருக்கு பெருமை சேர்க்கும் வகையில் நிகழ்ச்சியை சிறப்பாக கொண்டாடுவதெனஇக்கூட்டம்ஏகமனதாக தீர்மானிக்கிறது.

திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகத்திற்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர்கழகங்களில், வருகின்ற 2023 சூன் 3 தொடங்கி, 2024 சூன் 3 வரை ஓராண்டு காலத்திற்குத் தொடர்ச்சியாக நிகழ்ச்சிகளைத் நடத்திட வேண்டும். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டுவிழா,திராவிடமுன்னேற்றக் கழகத்தின் 75ஆம் ஆண்டை முன்னிட்டு ஒவ்வொருஒன்றிய,நகர,வார்டு, கிளைக்கழகங்களில் உள்ள பழைய கொடிக் கம்பங்களைப்புதுப்பிக்கவேண்டும். கழகமூத்தமுன்னோடிகளின் வீடுகளுக்குசென்றுஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் கௌரவிக்க வேண்டும்.மாணவர்கள் இளைஞர்களுக்கிடையேபோட்டிகள் நடத்தி பரிசாக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் எழுதியபுத்தகங்களைவழங்கிட வேண்டும்.கழகக்குடும்பங்களைச்சேர்ந்த100மாணவர்களைத் தேர்ந்தெடுத்து கல்விஉதவிகளைவழங்கிட வேண்டும். பல்வேறு துறைகளைச் சார்ந்தவர்களைக் கொண்டு கருத்தரங்கம், பொதுக்கூட்டம் போன்ற நிகழ்வுகளை நடத்தவும். கணினி, இண்டர்நெட் வசதிகளுடன்கூடியநவீனமான கலைஞர்நூற்றாண்டுபடிப்பகங்களைத் தொடங்கிட வேண்டும். மேற்கண்ட செயல்களை திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகம் சார்பில் சிறப்பாக செயல்படுத்திடுவதெனஇக்கூட்டம் தீர்மானிக்கிறது.

திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகத்திற்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் புதிதாக உறுப்பினர் சேர்க்கை படிவங்களை தங்களது அயராது உழைப்பை கொடுத்தமைக்கு பாராட்டுக்களையும், மேலும் இது வரை படிவங்களை சமர்பிக்காதவர்கள் காலம் தாழ்த்தாமல் உடனடியாக சமர்ப்பிக்க வேண்டுமென இக்கூட்டத்தின் வாயிலாக கேட்டுக் கொள்ளப்படுகிறது.

சூன் 3 அன்று மதச்சார்பற்ற முற்போக்குகூட்டணி கட்சியின் தலைவர்கள் பங்கேற்கும்தமிழினத்தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழாப் பொதுக்கூட்டம் வடசென்னையிலும், சூன் 20ந்தேதிதிருவாரூரில்கலைஞர் கோட்டத்தினை பீகார் முதலமைச்சர் நிதிஷ்குமார் அவர்கள் திறந்து வைத்துச் சிறப்பிக்க உள்ளார். இந்த விழாவில் மாவட்டக் கழக நிர்வாகிகள் , தோழர்கள் அனைவரும் கலந்திட வேண்டுமென தலைமைக் கழகத்தால் அறிவுறுத்தப் பட்டுள்ளது. எனவே, மேற்குறிப்பிட்டுள்ள நிர்வாகிகள், தோழர்கள் இன்நிகழ்வுகளில் கலந்து கொண்டு சிறப்பிப்பதென இக்கூட்டம்ஏகமனதாகதீர்மானிக்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# தருமபுரி கிழக்கு மாவட்டக் கழக செயற்குழு கூட்டம்!

## மாவட்ட கழக செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி அறிவிப்பு!



தருமபுரி கிழக்கு மாவட்டக் கழக செயற்குழு கூட்டம் வருகின்ற 28.05.2023 ஞாயிற்றுக்கிழமை மதியம் 2.00 மணி அளவில் மாவட்ட கழக அலுவலகம் கலைஞர் அறிவாலயம் தளபதி அரங்கில் மாவட்ட அவைத்தலைவர் சி.செல்வராஜ் தலைமையில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் தமிழ்நாடு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் கலந்துகொண்டு சிறப்புரையாற்றவுள்ளார் அது சமயம் இந்நாள், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், தலைமைச்செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், கிளை கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் , உள்ளாட்சி பிரதிநிதிகள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : 1. தமிழினத் தலைவர் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா குறித்து

2. புதிய உறுப்பினர்கள் சேர்த்தல் குறித்து

3. கழக ஆக்கப்பணிகள் குறித்து.

**தடங்கம் பெ.சுப்பிரமணி**
செயலாளர்
தருமபுரி கிழக்கு மாவட்ட தி.மு.க.



தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், நல்லதங்காள் ஓடை நீர்த்தேக்கத்திலிருந்து 4744 ஏக்கர் விவசாய நிலங்கள் பயன்பெறும் வகையில் தண்ணீரை திறந்து வைத்தார்கள். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் தா.கிறிஸ்துராஜ், திருப்பூர் மாநகராட்சி, 4 வது மண்டலக் குழுத் தலைவர் இல.பத்மநாபன், நல்லதங்காள் ஓடை நீர்த்திறப்பு செயற்பொறியாளர் கோபி ஆகியோர் உள்ளனர்.

## தி.மு.க. சட்டதிட்டத் திருத்தக்குழு

# மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம்!

## வழக்கறிஞர் இரா.கிரிராஜன், எம்.பி., அறிவிப்பு!

தி.மு.க. சட்டதிட்டத் திருத்தக் குழு மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம் இன்று (26-05-2023 வெள்ளிக்கிழமை) மாலை 4.00 மணியளவில், சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் எனது (இரா.கிரிராஜன்) தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் சட்டதிட்டத் திருத்தக்குழு மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா

**இரா.கிரிராஜன், எம்.பி.**
செயலாளர்
தி.மு.க. சட்டதிட்டத் திருத்தக்குழு

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## மெட்டல் பாக்ஸ் மு.நடராசன்
## மே 26 (2003)



**கழகம் துவக்கிய காலத்திலேயே உறுப்பினராகி, தமது பகுதியில் மன்றத்தை துவக்கி கழகப் பணியாற்றியவர்.**

**இராயபுரம் பகுதி பிரதிநிதி, பகுதி அவைத் தலைவர் மற்றும் இராதாகிருஷ்ணன் நகர் பகுதி துணைச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.**

**மெட்டல் பாக்ஸ் தொழிற்சாலையில் தொ.மு.ச. அமைப்பை உருவாக்கி அதன் பொதுச்செயலாளராகவும், மாவட்ட கவுன்சில் பொதுச் செயலாளராகவும் பொறுப்பு வகித்து தொழிலாளர் முன்னேற்றத்திற்கு பாடுபட்டவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**